Dinakaran /
தினகரன்

14 NOV 2025



# துணைநிலை ஆளுநரை சந்தித்த பல்கலைக்கழக துணைவேந்தர்



## பட்டமளிப்பு விழாவுக்கு வருமாறு அழைப்பு

புதுச்சேரி, நவ. 14: புதுவை பல்கலைக்கழகதுணைவேந்தர் பிரகாஷ் பாபு, புதுச்சேரி துணைநிலை ஆளுநரும், பல்கலைக்கழகத்தின் தலைமை காப்பாளருமான கைலாஷ்நாதனை ராஜ்நிவாஸில் சந்தித்தார். இந்த சந்திப்பின்போது, இந்திய குடியரசு துணைத்தலைவரும், புதுவை பல்கலைக்கழகத்தின் வேந்தருமான சி.பி. ராதாகிருஷ்ணனை சமீபத்தில் டெல்லியில் சந்தித்ததையொட்டி ஏற்பட்ட விவாதங்களை துணைநிலை ஆளுநரிடம் விளக்கினார். டிசம்பர் மாதம் நடத்த திட்டமிட்டுள்ள புதுவை பல்கலைக்கழகத்தின் 30வது பட்டமளிப்பு விழாவில் குடியரசு துணைத்தலைவருடன் கலந்து கொள்ளுமாறு, கவர்னருக்கு அழைப்பு விடுத்தார்.2021, 2022, 2023 மற்றும் 2024 ஆண்டுகளுக்கான பட்டதாரிகளுக்காக 30வது பட்டமளிப்பு விழா தற்காலிகமாக டிசம்பரில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. க்யூ எஸ் ஆசியா பல்கலைக்கழக தரவரிசை 2026ம் ஆண்டு, புதுவை பல்கலைக்கழகம் ஆசிய அளவில் 470வது இடத்தையும், இந்திய மத்திய பல்கலைக்கழகங்களில் 7வது இடத்தையும், இந்திய பல்கலைக்கழகங்களிலேயே 63வது இடத்தையும், தெற்காசிய பல்கலைக்கழகங்களில் 121வது இடத்தையும் பெற்றுள்ளதாக துணை வேந்தர் விளக்கினார். பல்கலைக்கழகத்தின் தலைமை காப்பாள்ரான கைலாஷ்நாதன், சமூகத்தின் இடையறாத முன்னேற்றத்தையும், ஒழுங்குமுறையுடனான கல்வித்தர பராமரிப்பையும் பாராட்டினார். நரம்பியல் மற்றும் மருந்து கண்டுபிடிப்பு துறையில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் தலைமைத்துவம் ஆகிய துறைகளில் துணைவேந்தர் பிரகாஷ்பாபு வழங்கிய சிறப்பான பங்களிப்பை மதித்து, உயிர் தகவலியல் மற்றும் மருந்து கண்டுபிடிப்பு சங்கம் வழங்கிய வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்றதற்காக, துணைநிலை ஆளுநர் வாழ்த்துக்கள் தெரிவித்தார்.

Dinamalar / தினமலர்

14 NOV 2025

# டிசம்பரில் புதுச்சேரி பல்கலை பட்டமளிப்பு விழா துணை ஜனாதிபதி, கவர்னருக்கு அழைப்பு



புதுச்சேரி பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பங்கேற்க வேண்டும் என, கவர்னர் கைலாஷ்நாதனை நேரில் சந்தித்து துணைவேந்தர் பிரகாஷ் பாபு அழைப்பு விடுத்தார்.

**புதுச்சேரி, நவ. 14–**

புதுச்சேரி பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பங்கேற்க வேண்டும் என, கவர்னர் கைலாஷ்நாதனை நேரில் சந்தித்து துணை வேந்தர் பிரகாஷ் பாபு அழைப்பு விடுத்தார்.

புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் பிரகாஷ், கவர்னர் கைலாஷ்நாதனை ராஜ் நிவாஸில் சந்தித்து பேசினார். இந்தச் சந்திப்பின்போது, துணை ஜனாதிபதி ராதாகிருஷ்ணனை சமீபத்தில் புதுடில்லியில் சந்திக்கது குறித்து எடுத்துரைத்தார்.

அத்துடன், 2025 டிசம்பரில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் 30வது பட்டமளிப்பு விழாவில் துணை ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் பங்கேற்க உள்ளார். தாங்களும் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்க வேண்டும் என, அழைப்பு விடுத்தார்.

மேலும், கி.யூ., ஆசியா பல்கலைக் கழக தரவரிசை 2026ல், புதுச்சேரி பல்கலைக்கழகம் ஆசிய அளவில் 470–வது இடத்தையும், இந்திய மத்திய பல்கலைக்கழகங்களில் 7வது இடத்தையும், இந்திய பல்கலைக்கழகங்களில் 63–வது இடத்தையும், தெற்காசிய பல்கலைக்கழகங்களில் 121வது இடத்தையும் பெற்றுள்ளதாக துணை வேந்தர் விளக்கினார். இதனைத் தொடர்ந்து கவர்னர் கைலாஷ்நாதன், பல்கலைக்கழக கல்வித் தர பராமரிப்பை பாராட்டினார்.

அப்போது 'வாழ்நாள் சாதனையாளர்விருது' பெற்றதற்காக, துணைவேந்தர் பிரகாஷ்பாபுக்கு கவர்னர் வாழ்த்து தெரிவித்தார்.

Dinamani / தினமணி

14 NOV 2025

# புதுச்சேரி பல்கலை.யில் டிசம்பரில் பட்டமளிப்பு விழா: குடியரசு துணைத் தலைவர் பங்கேற்பு

**புதுச்சேரி, நவ.13:** புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் வரும் டிசம்பர் மாதம் நடைபெற உள்ள 30 -ஆவது பட்டமளிப்பு விழாவில் குடியரசுத் துணைத்தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் பங்கேற்கிறார்.

இதுகுறித்து பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

புதுச்சேரி மத்திய பல்கலைக் கழக தலைமை காப்பாளரும், புதுச்சேரி யூனியன் பிரதேச துணைநிலை ஆளுநருமான கே. கைலாஷ்நாதனை மத்திய பல்கலைக்கழக துணைவேந்தர் பி. பிரகாஷ்பாபு வியாழக்கிழமை சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, குடியரசுத் துணைத் தலைவரும் புதுவை மத்தி பல்கலைக்கழகத்தின் வேந்தருமான சி.பி.ராதாகிருஷ்ணனை அண்மையில் புதுதில்லியில் சந்தித்ததையொட்டி, அதுகுறித்து



புதுச்சேரி அரசின் துணைநிலை ஆளுநர் கே. கைலாஷ்நாதனை வியாழக்கிழமை சந்தித்த புதுச்சேரி மத்திய பல்கலை. துணைவேந்தர் பி. பிரகாஷ் பாபு.

துணைநிலை ஆளுநரிடம் துணைவேந்தர் விளக்கினார்.

அத்துடன், வரும் டிசம்பரில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள புதுவை பல்கலைக்கழகத்தின் 30-ஆவது பட்டமளிப்பு விழாவில் குடியரசு துணைத் தலைவருடன் கலந்து கொள்ளுமாறு புதுச்சேரி துணைநிலை ஆளுநருக்கு அவர் அழைப்பு விடுத்தார். கடந்த 2021, 2022, 2023 மற்றும் 2024 -ஆம் ஆண்டுகளுக்கான பட்டதாரிகளுக்காக 30-ஆவது பட்டமளிப்பு விழா வரும் டிசம்பரில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், 'க்யூஎஸ் ஆசியா' பல்கலைக்கழக தரவரிசை 2026 இல், புதுவை பல்கலைக்கழகம் ஆசிய அளவில் 470- ஆவது இடத்தையும், இந்திய மத்திய பல்கலைக்கழகங்களில் 7-ஆவது இடத்தையும், இந்திய பல்கலைக் கழகங்களிலேயே 63-ஆவது இடத்தையும், தெற்காசிய பல்கலைக்கழகங்களில் 121-ஆவது இடத்தையும் பெற்றுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

The Hindu / தி இந்து தமிழ்
14 NOV 2025

# புதுவை மத்திய பல்கலை.யில் டிசம்பரில் பட்டமளிப்பு விழா



▲ துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதனை சந்தித்த புதுவை மத்திய பல்கலைக்கழக துணைவேந்தர் பிரகாஷ்பாபு.

**புதுச்சேரி**

புதுச்சேரி மத்திய பல்கலைக் கழக தலைமை காப்பாளரும், துணைநிலை ஆளுநருமான கைலாஷ்நாதனை மத்திய பல்கலைக்கழக துணைவேந்தர் பிரகாஷ்பாபு நேற்று சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின் போது, இந்திய குடியரசுத் துணைத் தலைவரும், புதுவை பல்கலைக்கழகத்தின் வேந்தருமான சி.பி. ராதாகிருஷ்ணனை சமீபத்தில் டெல்லியில் சந்தித்ததை யொட்டி ஏற்பட்ட விவாதங்களை துணைநிலை ஆளுநரிடம் துணைவேந்தர் விளக்கினார். அத்துடன், வரும் டிசம்பரில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள புதுவை பல்கலைக் கழகத்தின் 30-வது பட்டமளிப்பு விழாவில் குடியரசுத் துணைத் தலைவருடன் கலந்து கொள்ளுமாறு புதுச்சேரி துணைநிலை ஆளுநருக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

கடந்த 2021, 2022, 2023 மற்றும் 2024-ம் ஆண்டுகளுக்கான பட்டதாரிகளுக்காக 30-வது பட்டமளிப்பு விழா வரும் டிசம்பரில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.